சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.

பு.சா.1 திரு நெடுமாறன் த /பெ சுப்பிரமணி , வயது 57 .

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :-**

1. எனக்கும் எதிரிக்கும் சந்தை வியாபாரம் மூலம் பழக்கம் ஏற்பட்டது. தானியங்கள் பழங்கள் உள்ளிட்டவையை நான் சந்தையில் வைத்து வியாபாரம் செய்து வருகிறேன். இரண்டாம் எதிரி லாரி வைத்து தொழில் செய்து வருகிறார். எதிரி எனக்கு பத்து ஆண்டுகளாக பழக்கம். எதிரி எனக்கு கமிஷன் கொடுத்த வகையில் பழக்கம் என்றால் சரிதான். எதிரி அடிக்கடி என்னிடம் பணம் பெற்று திரும்ப கொடுத்து விடுவார் என்றால் சில தடவை பணம் பெற்று திரும்ப கொடுத்து விட்டார். எதிரிக்கு நான் வட்டிக்கு கடன் கொடுத்தேனா என்றால் இல்லை கைமாற்றாக பணம் கொடுத்தேன். எதிரி என்னிடம் கடனாக பெற்ற ரூபாய் 7 லட்சம் ஆனது சிறிய தொகையா அல்லது பெரிய தொகையா என்றால் பெரிய தொகையாகும். கடந்த 2024 ஆம் வருடம் எட்டாம் மாதம் எதிரி என்னிடம் பணம் கேட்டார். எதிரே என்னிடம் ரூபாய் 10 லட்சம் கேட்டார் ஆனால் என்னிடம் சிறுசேமிப்பு மூலம் 7 லட்சம் மட்டும் இருந்தது. அந்த பணத்தை எதிரிக்கு கொடுத்தேன். சிறு சேமிப்பை நான் வங்கியில் வைத்திருந்தேனா என்றால் இல்லை கையில் ரொக்கமாக வைத்திருந்தேன்.எதிரி கேட்டவுடன் பணத்தை கொடுத்து விட்டானா என்றால் இல்லை ஒரு வாரம் கழித்து பணத்தை தயார் செய்து கொடுத்தேன். பணத்தைக் கேட்டு ஒரு வாரம் கழித்து தான் எதிரிக்கு கொடுத்ததாக புகாரிலும் முதல் விசாரணையிலும் நான் தெரிவிக்கவில்லை என்றால் சரிதான்.

2. ரூபாய் 7 லட்சத்தை 500 ரூபாய் தாள்களாக எதிரிக்கு கொடுத்தேன். யார் முன்னிலையில் பணத்தை கொடுத்தேன் என்றால் என் வீட்டில் வைத்து எதிரிக்கு பணம் கொடுத்தேன். அப்போது எங்கள் இருவரை தவிர வேறு யாரும் வீட்டில் இல்லை என்றால் சரிதான். பணத்தை பெற்றுக் கொண்ட எதிரி ஒரு மாதத்தில் திரும்பி தருவதாக கூறினார். பணத்தை பெற்றுக் கொண்ட அன்றே எதிரி காசோலை என்னிடம் பூர்த்தி செய்து கொடுத்தார். எதிரிக்கு ஏற்கனவே ரூபாய் 7 லட்சம் மட்டுமே என்னிடம் உள்ளது என்று தெரிவித்ததால்

அந்த பணத்திற்கு பூர்த்தி செய்து காசோலை எடுத்து வந்தார். பணத்தை பெற்றுக் கொண்ட எதிரி ஒரு மாதம் கழித்து காசோலை வங்கியில் செலுத்துமாறு கூறினார். அந்த காசோலையானது பேங்க் ஆப் இந்தியா வங்கியை சார்ந்ததாகும். நான் இந்தியன் ஓவர்சீஸ் வங்கியில் கணக்கு வைத்துள்ளேன். காசோலை தேதியானது 16.09.2024 ஆகும். காசோலை எண்ணானது 012981 ஆகும். காசோலையை நான் 30ஆம் தேதி வங்கியில் செலுத்தினேன்.16.09.2024 தேதியிட்ட காசோலை என்னிடம் கொடுத்த பின்பு என்ன காரணத்திற்காக 30ஆம் தேதி காசோலையை காலதாமதமாக வங்கியில் செலுத்தினேன் என்றால் எதிரிடம் காசோலையை வங்கியில் செலுத்தலாமா என்று கேட்டதற்கு அவர் 25 , 26 ஆம் தேதிக்கு பின்பு வங்கியில் செலுத்துமாறு கூறியதால் நான் செலுத்தினேன். இந்த விவரங்களை முதல் விசாரணையிலும் புகாரிலும் தெரிவித்துள்ளன என்றால் இல்லை ஆனால் என் வழக்கறிஞரிடம் தெரிவித்துள்ளேன்.